**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**
**முன்னிலை திரு.தி.திருமால், பி.ஏ., பி.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, காஞ்சிபுரம்,(பொறுப்பு).**
**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ஆம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண்.2/2024**
**CNR No.TNKP.07-000004/2024.**

G.அன்பரசு

....வாதி.

/எதிராக/

1.அகிலாண்டேஸ்வரி,
2.சூர்யகலா,
3.பிரகாஷ்,
4..இளவர் மோகன்ராஜ்,
5.இளவர் மோகன சுந்தரி,
6.K.குமணன்.

...பிரதிவாதிகள்.

இவ்வழக்கு 02.04.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்காக திரு.R.அப்துல்ஹக்கீம் அவர்கள் முன்னிலையாகியும், 6ஆம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பிலும் உள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

வாதி இந்த வழக்கினை, வழக்கு சொத்தினை 4 பாகங்களாக பிரித்து அதில் 1 பாகத்தை வாதிக்கு பிரித்து கொடுக்க கோரி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், அதனை வழக்கறிஞர் ஆணையரை நியமித்து இறுதிநிலை தீர்ப்பாணையின் மூலம் நிறைவேற்றிடவும், முதல் பிரதிவாதி 6ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 20.11.2023 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.7315/2023, 7316/2023 மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் 6ஆம் பிரதிவாதிக்கு 20.11.2023 அன்று எழுதிக்கொடுத்த கிரைய

ஆவணம் எண்.7317/2023 ஆகிய ஆவணங்கள் இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு சொத்தில் வாதியின் பாகத்தில் பிரதிவாதிகள் வில்லங்கம் ஏற்படுத்தக்கூடாது என்றும், வழக்கு சொத்தின் இயற்கை அமைப்பை மாற்றக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மற்றும் வழக்கின் செலவுத் தொகைக்காகவும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.<u>வாதியின் வழக்குரையின் சுருக்கம்</u>

வாதி தனது வழக்குரையில், முதல் பிரதிவாதி தனது தாயார் என்றும், 2ஆம் பிரதிவாதி தனது சகோதரி என்றும், 3ஆம் பிரதிவாதி தனது இறந்துவிட்ட சகோதரி அஞ்சாலாட்சி அவர்களின் கணவர் என்றும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் அவரின் வாரிசுகள் என்றும், 6ஆம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்றவர் என்றும், மேலும் அருளாநந்தன் என்ற தன்னுடைய சகோதரர் திருமணமாகாமலே கடந்த 18.05.2020 அன்று இறந்துவிட்டார் என்றும், வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து என்றும், அதாவது தங்கள் தகப்பனார் கோவிந்தசாமி நாயக்கர் அவர்களுக்கு நத்தம் சர்வே எண்.646/13, அதன் பழை சர்வே எண்.376/24 பார்ட்–இல் 311 சதுர மீட்டர் வீட்டுமனை நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் பட்டா பெற்று அனுபவித்து வந்தார் என்றும், மேலும் சர்வே எண்.487/4பி–ல் 0.48 செண்ட் நிலத்தினை தன் தகப்பனார், தனது தாய் பெயரில் கூட்டாக இந்து கூட்டு குடும்ப வருவாய் மூலம் கிரையமாக பெற்று அப்பத்திரமானது 02.03.1988 –ம் தேதியில் ஆவணம் எண்.319/1988 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் சர்வே எண்.487/3பி–ல் 0.36 செண்ட் மற்றும் சர்வே எண்.486/4ஏ–ல் 0.04 செண்ட் சொத்துக்களும் கூட்டு குடும்ப சொத்தாகும்

என்றும், அச்சொத்துக்கள் கூட்டு குடும்ப வருவாய் கொண்டு தனது தாயார் பெயரில் கிரையம் பெற்றதாகும் என்றும், அச்சொத்துக்களுக்கான பட்டா தனது தாயார் பெயரிலேயே உள்ளது என்றும், வாதியின் பெற்றோர்களுடன் சேர்ந்து வாதியும் தன்னுடைய இறந்துவிட்ட சகோதரர் அருளானந்தமும் கடந்த 1995 ஆம் ஆண்டு வாலாஜாபாத் கூட்டுறவு நில வள வங்கியில் தனது சகோதரி அஞ்சலாட்சியின் திருமண செலவிற்காக வழக்கு சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்றதாகவும், மேலும் மேற்படி கடனை தன்னுடைய வருவாய் மூலமும் தனது மனைவியின் நகைகளை அடமானம் வைத்து வந்த வருவாய் கொண்டு வாதி மட்டுமே கடந்த ஆகஸ்ட் 2023 –ல் அடமானம் பைசல் செய்ததாகவும், மேலும், தனது தாயாருக்கு விபத்தில் காயம் ஏற்பட்டபோது அவரின் மருத்துவ செலவுகளை வாதி மட்டுமே பார்த்துக் கொண்டதாகவும், இந்த உண்மைகளை மறைத்து 1 முதல் 5 பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து வாதியின் ஒப்புதல் இன்றி வாதிக்குண்டாக பாகத்தை மறைத்து வழக்கு சொத்தினை விற்பனை செய்துள்ளனர் என்றும், இதனை அறிந்த வாதி கடந்த 30.10.2023–ம் தேதியில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களை முறைப்படி பாகப்பிரிவினை செய்துக்கொள்ள கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதற்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் எந்த பதிலும் அனுப்பாமல், தாவா சொத்துக்களை வாதிக்குண்டான பாகத்தை மறைத்து கூட்டு சுவாதீனத்தில் இருக்கும்போதே வாதிக்கு தெரியாமல் கடந்த 20.11.2023 தேதியில் முதல் பிரதிவாதி, முதல் பிரதிவாதி தாவா அட்டவணை ஏ சொத்தில் 1, 2 மற்றும் 3 அயிட்டம் சொத்துக்களில் 48 சென்ட் நிலத்தில் 24 சென்ட் நிலத்தை 6ஆம் பிரதிவாதிக்கு ஆவணம் எண்.7315/2023, மற்றும் 7316/2023–ன்படி கிரையம் செய்துள்ளார் என்றும், மேலும், அதே தேதியில் 1

முதல் 5 பிரதிவாதிகள் கூட்டாக சேரந்து ஆவணம் எண்.7317/2023–ன்படி ஏ அட்டவயை சொத்தில் 3வது அயிட்ட சொத்தில் அடங்கிய 18 சென்ட் நிலத்தை 6ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளனர் என்றும், மேலும் முதல் பிரதிவாதி தாவா சொத்துக்களை தனக்கு மட்டுமே உரிமை உள்ள சொத்துக்களாக பாவித்து, வாதியின் சம்மதமின்றி வாதிக்கு தெரியாமல் விற்பனை செய்துள்ளார் என்றும், மேலும் வாதியை கூட்டு குடும்ப வீட்டிலிருந்து வெளியேற்ற முயற்சித்தனர் என்றும், வாதியை பிரதிவாதிகள் தாவா சொத்திலிருந்து வெளியேற்ற எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேலும் வாதிக்கு தெரியாமல் வாதியின் சம்மதமின்றி 1 முதல் 5 பிரதிவாதிகள் ஏற்படுத்திய மேற்படி கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல, அவை வாதியை கட்டுப்படுத்தாது என்றும், எனவே வாதி இந்த வழக்கினை, வழக்கு சொத்தினை 4 பாகங்களாக பிரித்து அதில் 1 பாகத்தை வாதிக்கு பிரித்து கொடுக்க கோரி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், அதனை வழக்கறிஞர் ஆணையரை நியமித்து இறுதிநிலை தீர்ப்பாணையின் மூலம் நிறைவேற்றிடவும், முதல் பிரதிவாதி 6ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 20.11.2023 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.7315/2023, 7316/2023 மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் 6ஆம் பிரதிவாதிக்கு 20.11.2023 அன்று எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் எண்.7317/2023 ஆகிய ஆவணங்கள் இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு சொத்தில் வாதியின் பாகத்தில் பிரதிவாதிகள் வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என்றும், வழக்கு சொத்தின் இயற்கை அமைப்பை மாற்றக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மற்றும் வழக்கின் செலவுத் தொகைக்காகவும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

<u>3. முதல் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரை சுருக்கம்</u>

பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில், வழக்கு ஏ அட்டவணை சொத்தில் முதல் அயிட்ட சொத்தான சர்வே எண்.487/4பி–ல் ஏக்கர் 0.48 செண்ட் நிலமானது கடந்த 02.03.1988 அன்று முதல் பிரதிவாதியும், அவரது கணவர் லேட் கோவிந்தசாமியும் தங்கள் சொந்த வருமானத்தை கொண்டு கிரையம் வாங்கியதாகவும், மேற்படி 48 செண்டில் முதல் பிரதிவாதிக்கும் அவரது கணவருக்கும் தலா 24 செண்ட் சொந்தம் என்றும், முதல் பிரதிவாதியின் கணவர் அவருக்கு சொந்தமான 24 செண்ட் நிலத்தின் மீது எந்த ஏற்பாடும் செய்யாமல் கடந்த 10.11.1999 அன்று காலமாகிவிட்டார் என்றும், எனவே அவரின் வாரிசுகளான 1)முதல் பிரதிவாதி, (அவரது மனைவி), 2)வாதி (மகன்), 3)சூர்யகலா (மூத்த மகள்), 4) அருளானந்தம் (இளைய மகன்) மற்றும் 5)அஞ்சலாட்சி (இளைய மகள்) ஆகியோர் இருந்ததாகவும், மேற்படி நபர்களில் அருளானந்தம் கடந்த 18.05.2020 அன்று திருமணம் ஆகாமலேயே காலமாகிவிட்டார் என்றும், அஞ்சலாட்சி கடந்த 30.10.2018 அன்று 3 முதல் 5 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமானார் என்றும், எனவே, மேற்படி ஏ அட்டவணை முதல் அயிட்ட சொத்தில் முதல் பிரதிவாதியின் 1/2 பாகம் அதாவது 24 செண்ட் போக மீதம் உள்ள முதல் பிரதிவாதியின் கணவரின் 24 செண்டை நான்கு பாகமாக பிரித்தால் 1 நபருக்கு 1/4 பாகமாக 6 செண்ட் நிலம் கிடைக்கும் என்றும, அதில் வாதியின் 1/4 பாகமான 6 செண்ட் நிலத்தை விட்டுவிட்டு பிரதிவாதிகளின் 3/4–ல் பாகமான 18 செண்ட் நிலத்தை கடந்த 20.11.2023 அன்று குமணன் என்பவருக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் கிரையம் செய்துவிட்டதாகவும், வாதியின் 1/4 பாகமான 6

செண்ட் நிலத்தையும் சேர்த்து விற்பதற்கு ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசி ஒரு குடும்ப ஏற்பாடு முன்னிலைக்கு குறிப்பிட்ட ஒரு பகுதியில் 6 செண்ட் நிலத்தை வாதிக்கு ஒதுக்கிவிட்டு 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு உண்டான சட்டப்படியான பாகத்தை பிரதிவாதிகள் விற்றுவிட்டதாகவும், வாதிக்குரிய 6 செண்ட் நிலம் அங்கேயே உள்ளது என்றும் அதை அவர் எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்றும், மேற்படி விவரத்தை நன்கு அறிந்த வாதி வேண்டுமென்றே இந்த தேவையற்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு சொத்தில் ஏ அட்டவணையில் 2 மற்றும் 3ஆம் அயிட்ட சொத்து மற்றும் பி அட்டவணை சொத்து முதல் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும், அதாவது கடந்த 02.03.1988 தேதியில் முதல் பிரதிவாதியின் பெரியம்மா ரங்கநாயகியம்மாள் முதல் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைத்த பதிவு பெற்ற உயில் மூலம் கிடைக்கப்பெற்றது என்றும், கடந்த 18.03.1988 தேதியில் மேற்படி ரங்கநாயகியம்மாள் காலமாகிவிட்டார் என்றும், அதுமுதல் வழக்கு சொத்தில் ஏ அட்டவணையில் 2 மற்றும் 3ஆம் அயிட்ட சொத்து மற்றும் பி அட்டவணை சொத்து முதல் பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்து வந்தது என்றும், வாதி இன்றுவரை ஒரு பைசா கூட தாயார் என்ற கடமைக்காக முதல் பிரதிவாதியின் செலவிற்காக கொடுத்ததில்லை என்றும், முதல் பிரதிவாதியின் இளையமகன் அருளானந்தன்தான் முதல் பிரதிவாதியை பராமரித்து வந்தார் என்றும், அவர் கடந்த 18.05.2020 தேதியில் காலமானபின் முதல் பிரதிவாதிக்கு இன்றுவரை வாதி எந்த வகையிலும் பொருள் உதவியோ, பண உதவியோ செய்ததில்லை என்றும், ஒருவேலை சாப்பாடு போட்டதில்லை என்றும், முதல் பிரதிவாதி இந்த வயதிலும் வேவைலக்கு சென்றுதான் சாப்பிட்டு வருவதாகவும், வயதான காலத்தில் வேலைக்கு

சரிவர செல்லமுடியாததால் முதல் பிரதிவாதி அவருக்கு சொந்தமான வழக்கு ஏ அட்டவணை 2 மற்றும் 3வது அயிட்ட சொத்துக்களை முதல் பிரதிவாதி தனது மருத்துவ செலவிற்காகவும், தினசரி செலவிற்காகவும் விற்பணை செய்ததாகவும், மேற்படி ஏ அட்டவணை முதல் அயிட்ட சொத்தில் தனது 1/2 பாகம் அதாவது 24 செண்ட் போக மீதமுள்ள முதல் பிரதிவாதி கணவரின் 24 செண்டில் வாதியின் 1/4 பாகம் போக, மீதமுள்ள 3/4 பாகமான 18 செண்ட் நிலத்தையும் கடந்த 20.11.2023 அன்று கிரையம் செய்து அவரவர் பாகத்திற்கான பணத்தை அவரவரிடம் செலுத்திவிட்டதாகவும், வாதி மகனாக அவரது கடமையை ஒன்றுமே செய்யவில்லை என்றும், அவ்வப்போது குடித்துவிட்டு வந்து தன்னை அடித்து தன்னிடம் உள்ள பணத்தை பிடுங்கிகொள்வார் என்றும், கடந்த 2024 ஆம் ஆண்டு மே மாதம் வாதி குடித்துவிட்டு வந்து தன்னை பலமாக தாக்கிவிட்டு, பிரதிவாதி வைத்திருந்த ஆவணங்கள், ஆதார் அட்டை மற்றும் சிறிது சிறிதாக சேர்த்து வைத்திருந்த பணத்தையும் எடுத்து சென்றுவிட்டார் என்றும், அப்பொழுது முதல் பிரதிவாதிக்கு வலது கண், தலைபகுதி மற்றும் வலது கையில் பலமாக காயம் ஏற்பட்டது என்றும், காஞ்சிபுரம் அரசு மருத்துவமணையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு கிட்டதட்ட இரண்டு மாதங்கள் சிகிச்சை பெற்றதாகவும், இன்றுவரையும் தனது கண்பார்வை சரியாக தெரியவில்லை என்றும், மேற்படி சம்பவம் குறித்து காஞ்சிபுரம் தாலுகா காவல்நிலையத்தில் புகார் அளித்து வாதி மீது குற்ற எண்.462/2024 என முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு வாதி சிறையில் அடைக்கப்பட்டு, பிணையில் வெளியே வந்தார் என்றும், மேற்படி கிரிமினல் வழக்கு இன்றும் நிலுவையில் உள்ளது என்றும், வாதி பிரதிவாதிகளை தேவையில்லாமல் மன உளைச்சலுக்கு ஆளாக்கவேண்டும் என்ற

எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதிக்கு சேரவேண்டிய வழக்கு ஏ அட்டவணையில் முதல் அயிட்ட சொத்தில் உள்ள 6 செண்ட் நிலம் அங்கேயே உள்ளது என்றும், அதை அவர் எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்றும், அதை தவிர வழக்கு மற்ற சொத்துக்கள் பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்துகளாகும் என்றும், அதில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், எனவே வழக்கில் வாதி கோரிய பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்றும், வழக்கு ஏ அட்டவணை 2 மற்றும் 3வது அயிட்ட சொத்துகள் மற்றும் பி அட்டவணை சொத்து முதல் பிரதிவாதிக்கு சட்டப்படி சொந்தமான சொத்தாகும் என்றும், மேற்படி சொத்தை முதல் பிரதிவாதி கிரையம் செய்ய முழு உரிமை உள்ளது என்றும், எனவே முதல் பிரதிவாதி 6ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த ஆவணங்களான 7315/2023, 7316/2023 மற்றும் 7317/2023 ஆகியவை ரத்து செய்யகோரிய பரிகாரங்கள் வாதிக்கு சட்டப்படி வழங்கத்தக்கதல்ல என்றும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்றும், எனவே வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யுமாறும் பிரதிவாதி கோரியுள்ளார்.

<u>4.வழக்கெழு வினாக்கள்</u>

1. வாதி கோரியபடி பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?

2. வாதி கோரிய 20.11.2023 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.7315/2023 இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?

3.வாதி கோரிய 20.11.2023 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.7316/2023 இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?

4.வாதி கோரிய 20.11.2023 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.7317/2023 இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?

5. வாதி கோரிய வழக்கு சொத்தை விற்பனை செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?

6.வாதிக்கு வழங்கத்தக்க இதர பரிகரங்கள் என்ன?

5. வாதி தரப்பில் வாதி அன்பரசு வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தரப்பில் 1 முதல் 25 ஆவணங்கள் வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் முதல் பிரதிவாதி அகிலாண்டேஸ்வரி பி.சா1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவரது தரப்பில் பி.சா.1 மற்றும் பி.சா.ஆ.2 சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. வழக்கெழு வினா 1 முதல் 6–ற்கான தீர்வு

வாதி தனது வழக்குரையில், முதல் பிரதிவாதி தனது தாயார் என்றும், 2ஆம் பிரதிவாதி தனது சகோதரி என்றும், 3ஆம் பிரதிவாதி தனது இறந்துவிட்ட சகோதரி அஞ்சாலாட்சி அவர்களின் கணவர் என்றும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் அவரின் வாரிசுகள் என்றும், 6ஆம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்றவர் என்றும், மேலும் அருளாநந்தன் என்ற தன்னுடைய சகோதரர் திருமணமாகாமலே கடந்த 18.05.2020 அன்று இறந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளார்.

7. வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து என்றும், அதாவது தங்கள் தகப்பனார் கோவிந்தசாமி நாயக்கர் அவர்களுக்கு நத்தம் சர்வே எண்.646/13, அதன் பழைய சர்வே எண்.376/24 பார்ட்–இல் 311 சதுர மீட்டர் வீட்டுமனை நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் பட்டா பெற்று அனுபவித்து வந்தார் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி பட்டா வாதி தரப்பில் **வா.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சர்வே எண்.487/4பி–ல்

0.48 செண்ட் நிலத்தினை தன் தகப்பனார், தனது தாய் பெயரில் கூட்டாக இந்து கூட்டு குடும்ப வருவாய் மூலம் கிரையமாக பெற்று அப்பத்திரமானது 02.03.1988 –ம் தேதியில் ஆவணம் எண்.319/1988 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி கிரைய ஆவணம் வாதி தரப்பில் **வா.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சர்வே எண்.487/3பி–ல் 0.36 செண்ட் மற்றும் சர்வே எண்.486/4ஏ–ல் 0.04 செண்ட் சொத்துக்களும் கூட்டு குடும்ப சொத்தாகும் என்றும், அச்சொத்துக்கள் கூட்டு குடும்ப வருவாய் கொண்டு தனது தாயார் பெயரில் கிரையம் பெற்றதாகும் என்றும், அச்சொத்துக்களுக்கான பட்டா தனது தாயார் பெயரிலேயே உள்ளது என்று தெரிவித்துள்ளார். அந்த பட்டா வாதி தரப்பில் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. வாதியின் பெற்றோர்களுடன் சேர்ந்து வாதியும் தன்னுடைய இறந்துவிட்ட சகோதரர் அருளானந்தமும் கடந்த 1995 ஆம் ஆண்டு வாலாஜாபாத் கூட்டுறவு நில வள வங்கியில் தனது சகோதரி அஞ்சலாட்சியின் திருமண செலவிற்காக வழக்கு சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்றதாகவும், மேலும் மேற்படி கடனை தன்னுடைய வருவாய் மூலமும் தனது மனைவியின் நகைகளை அடமானம் வைத்து வந்த வருவாய் கொண்டு வாதி மட்டுமே கடந்த ஆகஸ்ட் 2023 –ல் அடமானம் பைசல் செய்ததாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் அதற்கான ஆவணங்கள் எதுவும் வாதி முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், தனது தாயாருக்கு விபத்தில் காயம் ஏற்பட்டபோது அவரின் மருத்துவ செலவுகளை வாதி மட்டுமே பார்த்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் அதற்கான ஆவணங்கள் எதுவும் வாதி முன்னிலைப்படுத்தவில்லை. இந்த உண்மைகளை மறைத்து 1 முதல் 5 பிரதிவாதிகள்

கூட்டாக சேர்ந்து வாதியின் ஒப்புதல் இன்றி வாதிக்குண்டாக பாகத்தை மறைத்து வழக்கு சொத்தினை விற்பனை செய்துள்ளனர் என்றும், இதனை அறிந்த வாதி கடந்த 30.10.2023–ம் தேதியில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களை முறைப்படி பாகப்பிரிவினை செய்துக்கொள்ள கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதற்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் எந்த பதிலும் அனுப்பவில்லை என்று தெரிவித்துள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு வாதி தரப்பில் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. தாவா சொத்துக்களை வாதிக்குண்டான பாகத்தை மறைத்து கூட்டு சுவாதீனத்தில் இருக்கும்போதே வாதிக்கு தெரியாமல் கடந்த 20.11.2023 தேதியில் முதல் பிரதிவாதி, தாவா அட்டவணை ஏ சொத்தில் 1, 2 மற்றும் 3 அயிட்டம் சொத்துக்களில் 48 சென்ட் நிலத்தில் 24 சென்ட் நிலத்தை 6ஆம் பிரதிவாதிக்கு ஆவணம் எண்.7315/2023, மற்றும் 7316/2023–ன்படி கிரையம் செய்துள்ளார் என்றும், மேலும், அதே தேதியில் 1 முதல் 5 பிரதிவாதிகள் கூட்டாக சேரந்து ஆவணம் எண்.7317/2023–ன்படி ஏ அட்டவணை சொத்தில் 3வது அயிட்ட சொத்தில் அடங்கிய 18 சென்ட் நிலத்தை 6ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். மேற்படி மூன்று கிரைய ஆவணங்களும் வாதி தரப்பில் **வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.15 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. முதல் பிரதிவாதி தாவா சொத்துக்களை தனக்கு மட்டுமே உரிமை உள்ள சொத்துக்களாக பாவித்து, வாதியின் சம்மதமின்றி வாதிக்கு தெரியாமல் விற்பனை செய்துள்ளார் என்றும், மேலும் வாதியை கூட்டு குடும்ப வீட்டிலிருந்து வெளியேற்ற முயற்சித்தனர் என்றும், வாதியை பிரதிவாதிகள் தாவா சொத்திலிருந்து வெளியேற்ற

எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேலும் வாதிக்கு தெரியாமல் வாதியின் சம்மதமின்றி 1 முதல் 5 பிரதிவாதிகள் ஏற்படுத்திய மேற்படி கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றும், அவை வாதியை கட்டுப்படுத்தாது என்றும், எனவே வாதி இந்த வழக்கினை, வழக்கு சொத்தினை 4 பாகங்களாக பிரித்து அதில் 1 பாகத்தை வாதிக்கு பிரித்து கொடுக்க கோரி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், அதனை வழக்கறிஞர் ஆணையரை நியமித்து இறுதிநிலை தீர்ப்பாணையின் மூலம் நிறைவேற்றிடவும், முதல் பிரதிவாதி 6ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 20.11.2023 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.7315/2023, 7316/2023 மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் 6ஆம் பிரதிவாதிக்கு 20.11.2023 அன்று எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் எண்.7317/2023 ஆகிய ஆவணங்கள் இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு சொத்தில் வாதியின் பாகத்தில் பிரதிவாதிகள் வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என்றும், வழக்கு சொத்தின் இயற்கை அமைப்பை மாற்றக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மற்றும் வழக்கின் செலவுத் தொகைக்காகவும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

11. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில், வழக்கு ஏ அட்டவணை சொத்தில் முதல் அயிட்ட சொத்தான சர்வே எண்.487/4பி—ல் ஏக்கர் 0.48 செண்ட் நிலமானது கடந்த 02.03.1988 அன்று முதல் பிரதிவாதியும், அவரது கணவர் லேட் கோவிந்தசாமியும் தங்கள் சொந்த வருமானத்தை கொண்டு கிரையம் வாங்கியதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி 48 செண்டில் முதல் பிரதிவாதிக்கும் அவரது கணவருக்கும் தலா 24 செண்ட் சொந்தம் என்று தெரிவித்துள்ளார்,

12. முதல் பிரதிவாதியின் கணவர் அவருக்கு சொந்தமான 24 செண்ட் நிலத்தின் மீது எந்த ஏற்பாடும் செய்யாமல் கடந்த 10.11.1999 அன்று காலமாகிவிட்டார் என்றும், எனவே அவரின் வாரிசுகளான 1)முதல் பிரதிவாதி,(அவரது மனைவி), 2)வாதி (மகன்), 3)சூர்யகலா (மூத்த மகள்), 4) அருளானந்தம் (இளைய மகன்) மற்றும் 5)அஞ்சலாட்சி (இளைய மகள்) ஆகியோர் இருந்ததாகவும், மேற்படி நபர்களில் அருளானந்தம் கடந்த 18.05.2020 அன்று திருமணம் ஆகாமலேயே காலமாகிவிட்டார் என்றும், அஞ்சலாட்சி கடந்த 30.10.2018 அன்று 3 முதல் 5 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமானார் என்றும், எனவே, மேற்படி ஏ அட்டவணை முதல் அயிட்ட சொத்தில் முதல் பிரதிவாதியின் 1/2 பாகம் அதாவது 24 செண்ட் போக மீதம் உள்ள முதல் பிரதிவாதியின் கணவரின் 24 செண்டை நான்கு பாகமாக பிரித்தால் 1 நபருக்கு 1/4 பாகமாக 6 செண்ட் நிலம் கிடைக்கும் என்றும, அதில் வாதியின் 1/4 பாகமான 6 செண்ட் நிலத்தை விட்டுவிட்டு பிரதிவாதிகளின் 3/4–ல் பாகமான 18 செண்ட் நிலத்தை கடந்த 20.11.2023 அன்று குமணன் என்பவருக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் கிரையம் செய்துவிட்டதாகவும், வாதியின் 1/4 பாகமான 6 செண்ட் நிலத்தையும் சேர்த்து விற்பதற்கு ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசி ஒரு குடும்ப ஏற்பாடு முன்னிலைக்கு குறிப்பிட்ட ஒரு பகுதியில் 6 செண்ட் நிலத்தை வாதிக்கு ஒதுக்கிவிட்டு 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு உண்டான சட்டப்படியான பாகத்தை பிரதிவாதிகள் விற்றுவிட்டதாகவும், வாதிக்குரிய 6 செண்ட் நிலம் அங்கேயே உள்ளது என்றும் அதை அவர் எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்றும், மேற்படி விவரத்தை நன்கு அறிந்த வாதி வேண்டுமென்றே இந்த தேவையற்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு சொத்தில் ஏ அட்டவணையில் 2

மற்றும் 3ஆம் அயிட்ட சொத்து மற்றும் பி அட்டவணை சொத்து முதல் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும் அந்த உயில் **பி.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஏ அட்டவணை சொத்தில் 2 மற்றும் 3 வது அயிட்ட சொத்துக்கள் பி அட்டவணை சொத்து ஆகிய மூன்று அயிட்ட சொத்துக்களும் உயில் மூலம் எழுதி கொடுத்துள்ளார். அந்த உயிலில் அந்த சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கடந்த 02.03.1988 தேதியில் முதல் பிரதிவாதியின் பெரியம்மா ரங்கநாயகியம்மாள் முதல் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைத்த பதிவு பெற்ற உயில் மூலம் கிடைக்கப்பெற்றது என்றும், கடந்த 18.03.1988 தேதியில் மேற்படி ரங்கநாயகியம்மாள் காலமாகிவிட்டார் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி ரங்கநாயகியம்மாள்ள இறப்பு சான்று பிரதிவாதி தரப்பில் **பி.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதுமுதல் வழக்கு சொத்தில் ஏ அட்டவணையில் 2 மற்றும் 3ஆம் அயிட்ட சொத்து மற்றும் பி அட்டவணை சொத்து முதல் பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்து வந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

13. மேலும், வாதி இன்றுவரை ஒரு பைசா கூட தாயார் என்ற கடமைக்காக முதல் பிரதிவாதியின் செலவிற்காக கொடுத்ததில்லை என்றும், முதல் பிரதிவாதியின் இளையமகன் அருளானந்தன்தான் முதல் பிரதிவாதிளய பராமரித்து வந்தார் என்றும், அவர் கடந்த 18.05.2020 தேதியில் காலமானபின் முதல் பிரதிவாதிக்கு இன்றுவரை வாதி எந்த வகையிலும் பொருள் உதவியோ, பண உதவியோ செய்ததில்லை என்றும், ஒருவேலை சாப்பாடு போட்டதில்லை என்றும், முதல் பிரதிவாதி இந்த வயதிலும் வேலைக்கு சென்றுதான் சாப்பிட்டு வருவதாகவும், வயதான காலத்தில் வேலைக்கு சரிவர செல்லமுடியாமல் அவதிப்பட்டு வருவதாக தெரிவிக்கிறார்.

14. முதல் பிரதிவாதி அவருக்கு சொந்தமான வழக்கு ஏ அட்டவணை 2 மற்றும் 3வது அயிட்ட சொத்துக்களை தனது மருத்துவ செலவிற்காகவும், தினசரி செலவிற்காகவும் விற்பனை செய்ததாகவும், அது உயில் மூலம் கிடைத்த சொத்து அது அவரது தனிப்பட்ட சொத்து என்றும் தெரிவித்துள்ளார்.

15. மேற்படி ஏ அட்டவணை முதல் அயிட்ட சொத்தில் தனது 1/2 பாகம் அதாவது 24 செண்ட் போக மீதமுள்ள முதல் பிரதிவாதி கணவரின் 24 செண்டில் வாதியின் 1/4 பாகம் போக, மீதமுள்ள 3/4 பாகமான 18 செண்ட் நிலத்தையும் கடந்த 20.11.2023 அன்று கிரையம் செய்து அவரவர் பாகத்திற்கான பணத்தை அவரவரிடம் செலுத்திவிட்டதாகவும், வாதி மகனாக அவரது கடமையை ஒன்றுமே செய்யவில்லை என்றும், அவ்வப்போது குடித்துவிட்டு வந்து தன்னை அடித்து தன்னிடம் உள்ள பணத்தை பிடுங்கிகொள்வார் என்றும், கடந்த 2024 ஆம் ஆண்டு மே மாதம் வாதி குடித்துவிட்டு வந்து தன்னை பலமாக தாக்கிவிட்டு, பிரதிவாதி வைத்திருந்த ஆவணங்கள், ஆதார் அட்டை மற்றும் சிறிது சிறிதாக சேர்த்து வைத்திருந்த பணத்தையும் எடுத்து சென்றுவிட்டார் என்றும், அப்பொழுது முதல் பிரதிவாதிக்கு வலது கண், தலைபகுதி மற்றும் வலது கையில் பலமாக காயம் ஏற்பட்டது என்றும், காஞ்சிபுரம் அரசு மருத்துவமணையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு கிட்டதட்ட இரண்டு மாதங்கள் சிகிச்சை பெற்றதாகவும், இன்றுவரையும் தனது கண்பார்வை சரியாக தெரியவில்லை என்றும், மேற்படி சம்பவம் குறித்து காஞ்சிபுரம் தாலுகா காவல்நிலையத்தில் புகார் அளித்து வாதி மீது குற்ற எண்.462/2024 என முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு வாதி சிறையில் அடைக்கப்பட்டு, பிணையில் வெளியே வந்தார் என்றும், மேற்படி கிரிமினல் வழக்கு இன்றும் நிலுவையில் உள்ளது என்றும், வாதி

பிரதிவாதிகளை தேவையில்லாமல் மன உளைச்சலுக்கு ஆளாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதிக்கு சேரவேண்டிய வழக்கு ஏ அட்டவணையில் முதல் அயிட்ட சொத்தில் உள்ள 6 செண்ட் நிலம் அங்கேயே உள்ளது என்றும், அதை அவர் எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்றும், அதை தவிர வழக்கு மற்ற சொத்துக்கள் பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்துகளாகும் என்றும், அதில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

16. எனவே வழக்கில் வாதி கோரிய பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்றும், வழக்கு ஏ அட்டவணை 2 மற்றும் 3வது அயிட்ட சொத்துகள் மற்றும் பி அட்டவணை சொத்து முதல் பிரதிவாதிக்கு சட்டப்படி சொந்தமான சொத்தாகும் என்றும், மேற்படி சொத்தை முதல் பிரதிவாதி கிரையம் செய்ய முழு உரிமை உள்ளது என்றும், எனவே முதல் பிரதிவாதி 6ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த ஆவணங்களான 7315/2023, 7316/2023 மற்றும் 7317/2023 ஆகியவை ரத்து செய்யகோரிய பரிகாரங்கள் வாதிக்கு சட்டப்படி வழங்கத்தக்கதல்ல என்றும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்றும், எனவே வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யுமாறு கோரியுள்ளார்.

17. இந்த வழக்கை பொறுத்தளவில் வழக்கில் ஏ அட்டவணை சொத்தில் மூன்று அயிட்ட சொத்துக்களும், பி அட்டவணை சொத்தில் ஒரு அயிட்ட சொத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் பிரதிவாதிக்கு அவரது பெரியம்மாள ரங்கநாயகி அம்மாள் என்பவர் **பி.சா.ஆ.1** முன்னிலைக்கு வழக்கு சொத்தான ஏ அட்டவணை சொத்தில்

மூன்று அயிட்ட சொத்தில் 2வது அயிட்டம் 487/3பி – 36 செண்ட் மற்றும் 487/4ஏ–4 செண்டும், பி அட்டவணை சொத்தில் புதிய சர்வே எண்.646/13 பழைய சர்வே எண்.326/24 பகுதியில் அடங்கிய 3347 சதுரடி சொத்தும் எழுதி கொடுத்துள்ளார். அது முதல் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தாகும். அந்த சொத்தில் வாதிக்கு பாகம் கோர அறுகதை இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. வழக்கு சொத்தில் ஏ அட்டவணை சொத்தில் முதல் அயிட்டம் சர்வே எண்.487/4பி –ல் அடங்கிய 48 செண்ட் வா.சா.ஆ.2 முன்னிலைக்கு வாதியின் தந்தையும் முதல் பிரதிவாதியின் கணவருமான கோவிந்தசாமி மற்றும் முதல் பிரதிவாதி அகிலாண்டேஸ்வரி ஆகியோர் கூட்டாக கிரையம் வாங்கியுள்ளார்கள். முதல் பிரதிவாதியின் கூற்றுப்படி அந்த சொத்தில் சரிபாதி கிரையம் வாங்கிய 48 செண்டில் 24 செண்ட் தனக்கு பாத்தியப்பட்டது என்றும் மீதி பாதி பாகம் தனது கணவரான கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறார். அதனடிப்படையில் 24 செண்ட் நிலத்தை அவர் குமணன் என்பவருக்கு விற்பனை செய்து விட்டதாக தெரிவிக்கிறார். அது ஏற்கத்தக்கதாகவே இருக்கிறது. அதேபோல் தன்னுடைய கணவருக்கு பாத்தியப்பட்ட மீதமுள்ள 24 செண்ட் நிலம் அவரது இறப்புக்கு பிறகு மனைவி என்கிற அடிப்படையில் முதல் பிரதிவாதிக்கு ஒரு பாகமும், 2ஆம் பிரதிவாதிக்கு ஒரு பாகமும், 3ஆம் பிரதிவாதியின் மனைவியான அஞ்சலாட்சி என்பவருக்கு ஒரு பாகமும், உள்ளது என்றும் அந்த மொத்தமுள்ள 24 செண்டில் மேற்படி மூவருக்கும் 18 செண்ட் இடமும், வாதிக்கு 6 செண்ட் இடமும் பாகம் உண்டு என்று தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் மேற்படி மூவரும் சேர்ந்து குமணன் என்பவருக்கு 18 செண்ட் நிலம் விற்பனை செய்துள்ளார்கள். மீதம் 6 செண்ட் நிலம் வாதி அன்பரசு என்பவருக்கு

ஒதுக்கிவிட்டுதான் விற்பனை செய்திருப்பதாக தெரிவித்துள்ளார். வாதி ஒத்து வராததால் அவ்வாறு விற்பனை செய்ததாக தெரிவித்துள்ளார்கள். ஆகவே, இந்த வழக்கை பொறுத்தளவில் வழக்கு சொத்தான ஏ அட்டவணை சொத்தில் அயிட்டம் 2 மற்றும் 3, பி அட்டவணை சொத்து ஆகியவை தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்த வழக்கை பொறுத்தளவில் ஏ அட்டவணை சொத்தில் முதல் அயிட்ட சொத்தில் 6 செண்ட் 1/8 பாகம் வாதிக்கு வழங்கலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. அந்த பகுதி ஏற்கனவே வாதிக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மற்ற பங்குதாரர்கள் அவர்களுக்கு சொந்தமான சொத்தை கிரையம் செய்துவிட்டதால் அந்த ஆவணங்கள் இல்லா நிலையது என்று விளம்புகை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. வாதி இந்த நீதிமன்றத்தை தூய கரங்களுடன் அனுகவில்லை என்று முடீவு செய்யப்படுகிறது. அதுமட்டுமின்றி வழக்கு சொத்தினை விற்பனை செய்யக்கூடாது என்கிற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. வாதி கோரியபடி பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு ஏ அட்டவணை சொத்தில் முதல் அயிட்ட சொத்தில் 1/8 பாகம் அதாவது 6 செண்ட் நிலம் வழங்கத்தக்கது என்று வழக்கு சொத்தில் இதர சொத்தில் பாகம் வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 1 தீர்மானிக்கப்படுகிறது. வழக்கெழுவினா 2 வாதி கோரிய 20.11.2023 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.7315/2023 இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 2 தீர்மானிக்கப்படுகிறது. வழக்கெழுவினா 3 வாதி கோரிய 20.11.2023 தேதியிட்ட கிரைய

ஆவணம் எண்.7316/2023 இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 3 தீர்மானிக்கப்படுகிறது. வழக்கெழுவினா 4 வாதி கோரிய 20.11.2023 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.7317/2023 இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 4 தீர்மானிக்கப்படுகிறது. வழக்கெழுவினா 5 வாதி கோரிய வழக்கு சொத்தை விற்பனை செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 5 தீர்மானிக்கப்படுகிறது. வழக்கெழுவினா 1 முதல் 5 வரையிலானவை மேற்சொன்னவகையில் தீர்மானிக்கப்பட்டுவிட்டபடியால் இதர பரிகாரங்கள் எதுவும் வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 6 தீர்மானிக்கப்படுகிறது

இறுதியாக இந்த அசல் வழக்கு பகுதியளவில் அனுமதிக்கப்படுகிறது. வாதிக்கு வழக்கு சொத்தில் ஏ அட்டவணை முதல் அயிட்ட சொத்தில் 1/8 பாகம் வழங்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. இதர சொத்துக்கள் குறித்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. இதர பரிகாரங்கள் தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

சுருக்கெழுத்து தட்டச்சருக்கு என்னால் நேரடியாக சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் வருடம் ஏப்ரல் திங்கள் 16ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

THIRUNAVUKKARASU THIRUMAL

Additional Sub Judge[FAC], Kancheepuram
Digitally signed by THIRUNAVUKKARASU THIRUMAL
Date: 2026.04.16 15:33:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.(பொறுப்பு)

<u>வாதி தரப்பு சாட்சிகள்.</u>

வா.சா.1 அகிலாண்டேஸ்வரி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 31.05.1995 | கோவிந்தசாமி பெயரில் உள்ள வழக்கு அட்டவணை அயிட்டம் 4ற்கான நத்தம் பட்டா கணிணி நகல். |
| வா.சா.ஆ.2 | 02.03.1988 | சண்முகம் என்பவர் கோவிந்தசாமி மற்றும் அகிலாண்டேஸ்வரி பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் எண்.319/1988 |
| வா.சா.ஆ.3 | 03.12.2015 | அகிலாண்டேஸ்வரி பெயரில் உள்ள பட்டா |
| வா.சா.ஆ.4 | 08.12.1999 | கோவிந்தசாமி அவர்களின இறப்புச் சான்று |
| வா.சா.ஆ.5 | 12.10.2000 | கோவிந்தசாமி அவர்களின் வாரிசு சான்று |
| வா.சா.ஆ.6 | 20.05.2011 | வழக்கு சொத்து குறித்த வில்லங்க சான்று கணிணி நகல் |
| வா.சா.ஆ.7 | 16.10.2020 | அருளானந்தம் என்பவரின் இறப்புச் சான்று |
| வா.சா.ஆ.8 | 18.10.2023 | வழக்கு சொத்து குறித்த வில்லங்க சான்று கணிணி நகல். |
| வா.சா.ஆ.9 | 30.10.2023 | 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.10 | 03.11.2023 | முதல் பிரதிவாதி திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை. |
| வா.சா.ஆ.11 | 03.11.2023 | இரண்டாம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல். |
| வா.சா.ஆ.12 | | மூன்றாம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல். |
| வா.சா.ஆ.13 | 20.11.2023 | அகிலாண்டேஸ்வரி குமணன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் எண்.7315/2023 |
| வா.சா.ஆ.14 | 20.11.2023 | அகிலாண்டேஸ்வரி குமணன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் எண்.7316/2023 |
| வா.சா.ஆ.15 | 20.11.2023 | அகிலாண்டேஸ்வரி குமணன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் எண்.7317/2023 |
| வா.சா.ஆ.16 | 27.09.2023 | சிறுவாக்கம் கிராம நிர்வாக அலுவலர் சான்று |
| வா.சா.ஆ.17 | | வழக்கு சொத்தின் வழிகாட்டி மதிப்பு. |
| வா.சா.ஆ.18 | 05.07.1977 | பட்டம்மாள் என்பவர் ரத்தினம்மாள் என்பவருக்கு அடமானம் வைத்த ஆவணம். |
| வா.சா.ஆ.19 | 18.10.2023 | வாதி காஞ்சிபுரம் 2நீ இணை சார்பதிவகத்தில் கொடுத்த தடை மனு |
| வா.சா.ஆ.20 | 28.11.2023 | வாதி காஞ்சிபுரம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் கொடுத்த மனு |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.21 | 06.07.1992 | சண்முகம் கோவிந்தசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.22 | 12.01.2021 | அகிலாண்டேஸ்வரி குப்பன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.23 | 12.12.2011 | வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல். |
| வா.சா.ஆ.24 | | வழக்கு சொத்து குறித்த வில்லங்க சான்று கணிணி நகல் |
| வா.சா.ஆ.25 | | கோவிந்தசாமி பெயரில் உள்ள சொத்து வரி ரசீது அசல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>

பி.சா.1 அகிலாண்டேஸ்வரி

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்.</u>

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 02.03.1988 | சண்முகம் என்பவர் கோவிந்தசாமி மற்றும் அகிலாண்டேஸ்வரி பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் எண்.319/1988 |
| பி.சா.ஆ.2 | 17.11.2023 | ரங்கநாயகியம்மாள் இறப்புச்சான்று நகல். |

THIRUNAVUKKARASU THIRUMAL

Additional Sub Judge[FAC], Kancheepuram
Digitally signed by THIRUNAVUKKARASU THIRUMAL
Date: 2026.04.16 15:33:52 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.(பொறுப்பு)